தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

ஆணை எண்: 223 /பேரூ/2024
நாள் : 06.03.2025

திரு. P. மணிமாறன்,
வத்திராயிருப்பு,
விருதுநகர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு, வடக்குத் தெரு, கதவு எண்.131A/4, மேலப்பாளையம் என்ற முகவரியை சேர்ந்த திரு. P. மணிமாறன் என்பவரது 14.10.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.11.2024 அன்று பெறப்பட்டு, 223/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு, வடக்குத் தெரு, கதவு எண்.131A/4, மேலப்பாளையம் என்ற முகவரியை சேர்ந்த திரு. P. மணிமாறன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 14.10.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு பேரூராட்சியில் துாய்மைப் பணி மேற்பார்வையாளர் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் அரசு பணத்தை முறைகேடு செய்து கோடிக்கணக்கான பணத்தை ஊழல் செய்துள்ளார். அதன் தொடர்ச்சியாக 2020ஆம் ஆண்டில் பணிகள் செய்யாமலே செய்ததாக அரசு பணத்தை காசோலை எண்கள் 118470-118573-118588-118598-118600 ஆகிய காசோலைகள் இராமச்சந்திரன் பெயரிலேயே வழங்கப்பட்டு

திரு. இரா. இராமச்சந்திரன் வங்கி வணக்கில் பணம் வரவு பெற்றுள்ளது. இது தொடர்பாக விருதுநகர் உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு புகார் அனுப்பினேன். அதன்படி தணிக்கைத் துறை விசாரணை செய்ததில் முறைகேடு நிரூபணம் ஆகியும் இதுவரை வத்திராயிருப்பு செயல் அலுவலர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் திரு. இரா. இராமச்சந்திரன் வசிக்கும் தெரு திரு. இரா. இராமச்சந்திரன் பெயரில் சுமார் எட்டு வீடுகள் வரை உள்ளன. அரசு பணியில் உள்ள திரு. இரா. இராமச்சந்திரன் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தி அலுவலகத்தில் எந்தவிதமான ஆவணங்களும் ஒப்படைப்பு செய்யாமல் வரி தண்டலர் திரு. முகமது ரபிக் என்பவரும் கூட்டாக உயர்ரக வீடுகளுக்கு குறைந்த வரிவிதிப்பு நடைபெற்றுள்ளது. இது தொடர்பாக புகார் அனுப்பப்பட்டு விசாரணை செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை விசாரணையில் முறைகேடு நடந்தது உறுதி செய்யப்பட்டது. பேரூராட்சிகளின் மதுரை மண்டல உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை உதவி இயக்குநர் திரு. நெல்லையப்பன் என்பவரின் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டும், வத்திராயிருப்பு செயல் அலுவலர் தற்போது ஓய்வு பெறும் திரு. இரா. இராமச்சந்திரனிடம் கையூட்டு பெற்றுக் கொண்டும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேற்கண்ட தணிக்கைத் துறை உதவி இயக்குநர் நெல்லையப்பன், செயல் அலுவலர் திரு. ராதாகிருஷ்ணன் உள்பட 2014 முதல் 2024 வரை உள்ள அனைத்து ஆவணங்களையும் விசாரணை செய்து அரசு பணத்தை ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 28.11.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 22.01.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

(i) மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வத்திராயிருப்பு பேரூராட்சியில் பொது சுகாதார பணிகளை செய்தமைக்கு உரிய தொகைக்கான காசோலைகள் தூய்மைப் பணி மேற்பார்வையாளர் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் பெயரிலேயே வழங்கியது தொடர்பாக 2020-2021ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதி தணிக்கையில் பத்தி எண்.69ல் தடை எழுப்பப்பட்டு அதில் சம்பந்தப்பட்ட அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தடையில் சுட்டிக்காட்டப்பட்ட தூய்மைப் பணி மேற்பார்வையாளர் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் மீது 16.08.2022 முதல் காரணம் கோரும் குறிப்பாணை வழங்கப்பட்டு அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் 2023 (ஒழுங்குமுறையும் மற்றும் மேல்முறையீடும்) விதிகளின்படி வத்திராயிருப்பு தேர்வு நிலை பேரூராட்சி ந.க.எண்.61/2022 நாள் 15.03.2023ன்படி குற்றச்சாட்டுகள் பிறப்பிக்கப்பட்டு அதற்கான முகாந்திரங்கள் அன்னாரிடம் பெறப்பட்டு மேற்படி முகாந்திரங்கள் மீது விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விசாரணை அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில் கூடுதல் விளக்கம் கேட்டு குறிப்பாணை வழங்கியும் அதன்பேரில் அன்னார் கூடுதல் விளக்கம் அளித்துள்ளார். மேற்படி தூய்மைப் பணி மேற்பார்வையாளரின் முகாந்திரங்கள் மற்றும் அன்னாரின் கூடுதல் விளக்கத்தினையும் செயல் அலுவலரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே விசாரணை அலுவலரின் அறிக்கையில் அன்னார் மீது பிறப்பிக்கப்பட்ட 3 குற்றச்சாட்டுகளும் நிரூபணம் ஆகியுள்ளதால் மேற்படி குற்றச்சாட்டுகள் மீது 1 வருட திரண்ட பயனற்ற ஊதிய உயர்வு நிறுத்தம் செய்து பேரூராட்சி அலுவலக செயல்முறைகள் ந.க.எண்.61/2022 நாள் 07.05.2024ன்படி உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின் அடிப்படையில் அன்னார் பெற்ற மிகை ஊதியம் ரூ.12456/-ஐ செலுத்துச் சீட்டு எண்.58/2024-25 நாள் 23.05.2024ன்படி செலுத்தப்பட்டு பேரூராட்சின் பொது நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுகளின் மீதான இறுதி உத்தரவின்படி கூடுதலாக வழங்கப்பட்ட ஊதியம் மீள பெறப்பட்டது.

மேலும் தணிக்கைத் தடையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் குறித்தான தொகை ரூ.41,175/-ஐ திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் மூலம் பேரூராட்சி பொது நிதியில் செலுத்து சீட்டு எண்.1 நாள் 08.05.2024ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

(ii) மேலும் தூய்மைப் பணி மேற்பார்வையாளர் திரு. இரா. இராமச்சந்திரன் பெயரில் உள்ள வீடுகள் மற்றும் கடைகளுக்கு சொத்துவரி விதிப்பில் வருவாய் இழப்பு ஏற்படுத்தி உள்ளதாக மனுதாரர் புகார் தெரிவித்துள்ளார். திரு. இரா. இராமச்சந்திரன் என்பவரது பெயரில் கீழ்க்கண்ட வரி விதிப்பு எண்கள் கொண்ட குடியிருப்பு கட்டடம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வரி விதிப்பு செய்யப்பட்டு தற்போது வரை வசூல் செய்யப்பட்டுள்ளது. இந்த குடியிருப்புகள் பட்டா எண்.4556ன்படி தனியரது தந்தையான திரு. இராமையாத்தேவர் என்பவரின் பெயரில் இருந்த பூர்விக சொத்தாகும். எனவே இந்த 4 வரி விதிப்புகளைப் பொருத்த வரையில் தனியரது தந்தை பெயரிலிருந்து தனியரது பெயருக்கு மாற்றப்பட்ட சொத்துக்களாகும். இந்த வீடுகளுக்கு உரிய விதிமுறைகளின்படி சரியான அளவில் வரி விதிப்பு செய்யப்பட்டு, தொகை செலுத்தப்பட்டு வரப்படுகிறது.

சொத்துவரி சீராய்வுக்கு முன்பு					சொத்துவரி சீராய்வுக்கு பின்பு (தற்போது அளவீடு செய்யப்பட்ட அளவுகள்)			
வ.எண்.	வ.வி.எ.	க.எ	ச.அடி	2021-22ல் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.	வ.வி.எ.	க.எ	ச.அடி	2021-22ல் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.
வரி விதிப்புகள் குடியிருப்பு கட்டடங்களுக்கான விபரம்								
1	1948	35B	207	82	1948	35B	207	104
2	1949	35B	207	82	1949	35B/1	207	104
3	1950	35B-2	207	82	1950	35B/2	207	104
4	1951	35B/3	207	82	1951	35B/3	207	104

மேலும் அதற்குப் பின்னர் தனியரது பெயரில் வரிவிதிப்பு செய்யப்பட்ட குடியிருப்பு மற்றும் வணிக பயன்பாடுடைய கட்டடங்கள் விபரம் பின்வருமாறு உள்ளது.

சொத்துவரி சீராய்வுக்கு முன்பு					சொத்துவரி சீராய்வுக்கு பின்பு (தற்போது அளவீடு செய்யப்பட்ட அளவுகள்)			
வ.எண்.	வ.வி.எ.	க.எ	ச.அடி	2021-22ல் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.	வ.வி.எ.	க.எ	ச.அடி	2022-23ல் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.
குடியிருப்பு கட்டடங்களுக்கான விபரம்								
1	1952	35E	212	218	1952	35E	212	274
2	1953	35டி	268	284	1953	35டி	268	408
2017-18ஆம் ஆண்டில் 2 வரிவிதிப்புகள் வணிக கட்டடங்களுக்கான விபரம்								
1	1954	35E-1	96	514	1954	35E/1	96	1030
2	1955	35E/2	80	430	1955	35E/2	80	858

மேலே காணும் விபரப்படி விவரிக்கப்பட்டுள்ள தனியது பெயரில் உள்ள எட்டு வரி விதிப்புகளையும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் ஆய்வு செய்யப்பட்டதில், வரி விதிப்பு எண்கள் 1954 மற்றும் 1955 கொண்ட வணிக பயன்பாடுடைய கட்டடங்கள் 2017-18ஆம் ஆண்டு கள ஆய்வு மேற்கொண்டு வரி விதிப்பு செய்யப்படாமல் இருந்ததனை கண்டறிந்து வரி விதிப்பு செய்யப்பட்ட கட்டடங்களாகும்.

இந்த இரண்டு கட்டடங்களுக்கும் கட்டட உரிமக் கட்டணம் வசூல் செய்து தணிக்கைக்கு தெரிவிக்க வேண்டுமென அறிவுறுத்தியதின்படி, இப்பேரூராட்சியில் அங்கீரிக்கப்பட்ட தீர்மான எண்.250 நாள் 22.01.2008ல் கட்டட உரிமத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டவாறு மேற்படி வரி விதிப்புகளுக்கு உரிய கட்டட உரிமத் தொகை ரூ.1,320-/ பேரூராட்சி அலுவலக செலுத்து சீட்டு எண்.1477 நாள் 24.01.2023ல் செலுத்தப்பட்டுள்ளது.

தொகை விபரம் பின்வருமாறு:

<u>வரி விதிப்பு எண்.1954 - வணிக கட்டடம்</u>
கட்டட உரிமக் கட்டணம் 26 ச.அ x1. 5x5 - ரூ.720

<u>வரி விதிப்பு எண்.1955 - வணிக கட்டடம்</u>
கட்டட உரிமக் கட்டணம் 80 ச.அ x1. 5x5 - ரூ.600

மேலும் மேற்கண்டவாறு வரி விதிப்பு செய்யப்படாத கட்டடங்களுக்கு சொத்து வரி விதிப்பு செய்யப்படும்போது பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின்படி அபராதக் கட்டடணமாக 13 அரையாண்டுகளுக்கான வரி விதிப்பு தொகை கீழ்க்காணும் விபரப்படி தொகை செலுத்தப்பட்டுள்ளது.

வரிவிதிப்பு எண்.1954 அரையாண்டு வரி ரூ.515x13 = ரூ.6695-/ செலுத்து சீட்டு எண்.63 நாள் 28.05.2024

வரிவிதிப்பு எண்.1955 அரையாண்டு வரி ரூ.429x13 = ரூ.5577-/ செலுத்து சீட்டு எண்.64 நாள் 28.05.2024

மேற்கண்ட விபரப்படி கட்டட உரிமம் மற்றும் அபராதத் தொகை வசூலிக்கப்பட்டும், அப்போதைய செயல் அலுவலரால் கள ஆய்வு மூலம் நேரடியாக அளவுகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த கால அளவுகளும் தற்போது உள்ள அளவுகளும் சரியாக உள்ளது மற்றும் வரிவிதிப்பு தொகை சொத்துவரி சீராய்வின் போது உயர்வு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் வரிவிதிப்பு எண்.1954, 1955 கடைகளுக்கான உட்கட்டமைப்பு கட்டணம் மற்றும் கட்டட தொழிலாளர் நிதி ஆகியவற்றை செலுத்தப்படவில்லையென விருதுநகர் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை உதவி இயக்குநர் அவர்களின் 24.03.2023 நாளிட்ட கடிதம் பேரூராட்சி அலுலகத்திற்கு வரப்பெற்றதின் அடிப்படையில் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் உட்கட்டமைப்பு கட்டணம் ரூ.3,384 மற்றும் கட்டடத் தொழிலாளர் சந்தா தொகை 2,430-ஐயும் உரிய தலைப்பில் செலுத்தியுள்ளார். எனவே மேற்படி புகாரில் தெரிவிக்கப்பட்ட இழப்பு தொகை அனைத்தும் வசூல் செய்யப்பட்டுள்ளது.

எனவே வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சியில் தூய்மைப் பணி மேற்பார்வையாளர் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் பெயரில் பொது சுகாதாரப் பணிகள் செய்யப்பட்டமைக்காக தொகை ரூ.41,175/- வழங்கப்பட்டதனை தனியரிடம் வசூல் செய்து பேரூராட்சி நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் இக்குறைபாடு தொடர்பாக தனியர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் பெயரில் உள்ள வீடுகளுக்கு சொத்து வரி விதிப்பு விதிமுறைகளின்படி செய்யப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையில் தெரிவிக்கப்பட்டவாறு கட்டட உரிமம் பெறப்படாத 2 எண் வணிக பயன்பாடுடைய கட்டடங்களுக்கு கட்டட உரிமத் தொகை, அதற்குண்டான அபராதத் தொகை, உட்கட்டமைப்பு கட்டணம் மற்றும் கட்டடத் தொழிலாளர் நல நிதித் தொகை ஆகிய அனைத்தும் தனியரிடமிருந்து வசூல் செய்யப்பட்டு பேரூராட்சி நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதை பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் தூய்மைப் பணி மேற்பார்வையாளர் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் மீது தெரிவிக்கப்பட்டுள்ள புகார்கள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதால் வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரான தான் கையூட்டு பெற்றுக் கொண்டதென புகாரில் கூறுவது முற்றிலும் மறுக்கப்படுகிறது. எனவே எந்தவிதமான கையூட்டு தொகையும் பெறப்படவில்லை. மேலும் திரு. மணிமாறன் என்பவர் அளித்த புகாருக்கு விருதுநகர் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை உதவி இயக்குநர் அவர்களின் கடித நாள் 24.03.2023–ன்படி வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி கடிதக் குறிப்பு நாள் 29.05.2024–ல் உரிய பதில் மனுதாரரான திரு. மணிமாறன் என்பவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 17.02.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.02.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. P. மணிமாறன் என்பவர் 17.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்:–

- ➢ விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சியில் தூய்மைப் பணி மேற்பார்வையாளராகப் பணியாற்றிய திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் 2020 ஆம் ஆண்டில் பணிகள் செய்யாமலேயே பணி செய்ததாக பேரூராட்சியால் அவரது பெயரில் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.
- ➢ இதுகுறித்து விருதுநகர் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையில் புகார் அளிக்கப்பட்டதில், தணிக்கைத் துறை இம்முறைகேட்டினை தணிக்கை தடை விதித்து உறுதி செய்யப்பட்டது.
- ➢ ஆனால், பேரூராட்சி செயல் அலுவலரால் திரு. இரா. இராமச்சந்திரன் மீது இந்நாள்வரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.
- ➢ மேற்பார்வையாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. இரா. இராமச்சந்திரன் தனது பணிக் காலத்தில் முறைகேடாக பெற்ற பணத்தினை திருப்பி செலுத்திவிட்டார் என பேரூராட்சியால் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு முறைகேடு செய்த பணத்தை திரும்ப செலுத்தியதால் முறைகேடுகள் சரியாகிவிடுமா என்ற கேள்வி எழுகிறது.
- ➢ தூய்மைப் பணி மேற்பார்வையாளராக பணியாற்றிய திரு. இரா. இராமச்சந்திரன் வசிக்கும் தெருவில், இவரது பெயரில் 8 வீடுகள் உள்ளன. இந்த உயர்ரக வீடுகளுக்கு சொத்து வரியானது முறைகேடாக குறைந்தளவு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- ➢ இம்முறைகேட்டினையும் தணிக்கைத் துறை உறுதி செய்துள்ள நிலையில் பேரூராட்சியால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.
- ➢ திரு. இரா. இராமச்சந்திரன் என்பவரின் பெயரில் உள்ள 8 வீடுகளுக்கான சொத்தினை குறித்து முறையாக அனுமதி பெறப்படவில்லை என்கிற கூடுதல் புகாரினை தெரிவித்து கொள்கிறேன்.
- ➢ பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படும் வகையில் இம்முறைகேட்டிற்கு உடந்தையாக இருந்த பேரூராட்சியின் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இராதாகிருஷ்ணன் என்பவர் 17.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்:–

- ➢ மனுதாரர் புகாராக தெரிவித்துள்ளவாறு, வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சியில் பொது சுகாதாரப் பணிகளை செய்தமைக்கான உரிய தொகை முறைகேடாக தூய்மைப் பணி மேற்பார்வையாளர் திரு. இரா. இராமச்சந்திரன்

மேற்கண்ட விபரப்படி கட்டட உரிமம் மற்றும் அபராதத் தொகை வசூலிக்கப்பட்டும், அப்போதைய செயல் அலுவலரால் கள ஆய்வு மூலம் நேரடியாக அளவுகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த கால அளவுகளும் தற்போது உள்ள அளவுகளும் சரியாக உள்ளது மற்றும் வரிவிதிப்பு தொகை சொத்துவரி சீராய்வின் போது உயர்வு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் வரிவிதிப்பு எண்.1954, 1955 கடைகளுக்கான உட்கட்டமைப்பு கட்டணம் மற்றும் கட்டட தொழிலாளர் நிதி ஆகியவற்றை செலுத்தப்படவில்லையென விருதுநகர் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை உதவி இயக்குநர் அவர்களின் 24.03.2023 நாளிட்ட கடிதம் பேரூராட்சி அலுலகத்திற்கு வரப்பெற்றதின் அடிப்படையில் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் உட்கட்டமைப்பு கட்டணம் ரூ.3,384 மற்றும் கட்டடத் தொழிலாளர் சந்தா தொகை 2,430-ஐயும் உரிய தலைப்பில் செலுத்தியுள்ளார். எனவே மேற்படி புகாரில் தெரிவிக்கப்பட்ட இழப்பு தொகை அனைத்தும் வசூல் செய்யப்பட்டுள்ளது.

எனவே வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சியில் துாய்மைப் பணி மேற்பார்வையாளர் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் பெயரில் பொது சுகாதாரப் பணிகள் செய்யப்பட்டமைக்காக தொகை ரூ.41,175/- வழங்கப்பட்டதனை தனியாரிடம் வசூல் செய்து பேரூராட்சி நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் இக்குறைபாடு தொடர்பாக தனியர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் பெயரில் உள்ள வீடுகளுக்கு சொத்து வரி விதிப்பு விதிமுறைகளின்படி செய்யப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையில் தெரிவிக்கப்பட்டவாறு கட்டட உரிமம் பெறப்படாத 2 எண் வணிக பயன்பாடுடைய கட்டடங்களுக்கு கட்டட உரிமத் தொகை, அதற்குண்டான அபராதத் தொகை, உட்கட்டமைப்பு கட்டணம் மற்றும் கட்டடத் தொழிலாளர் நல நிதித் தொகை ஆகிய அனைத்தும் தனியரிடமிருந்து வசூல் செய்யப்பட்டு பேரூராட்சி நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதை பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் துாய்மைப் பணி மேற்பார்வையாளர் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் மீது தெரிவிக்கப்பட்டுள்ள புகார்கள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதால் வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரான தான் கையூட்டு பெற்றுக் கொண்டதென புகாரில் கூறுவது முற்றிலும் மறுக்கப்படுகிறது. எனவே எந்தவிதமான கையூட்டு தொகையும் பெறப்படவில்லை. மேலும் திரு. மணிமாறன் என்பவர் அளித்த புகாருக்கு விருதுநகர் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை உதவி இயக்குநர் அவர்களின் கடித நாள் 24.03.2023–ன்படி வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி கடிதக் குறிப்பு நாள் 29.05.2024–ல் உரிய பதில் மனுதாரரான திரு. மணிமாறன் என்பவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 17.02.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.02.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. P. மணிமாறன் என்பவர் 17.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்:–

- விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சியில் தூய்மைப் பணி மேற்பார்வையாளராகப் பணியாற்றிய திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் 2020 ஆம் ஆண்டில் பணிகள் செய்யாமலேயே பணி செய்ததாக பேரூராட்சியால் அவரது பெயரில் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.
- இதுகுறித்து விருதுநகர் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையில் புகார் அளிக்கப்பட்டதில், தணிக்கைத் துறை இம்முறைகேட்டினை தணிக்கை தடை விதித்து உறுதி செய்யப்பட்டது.
- ஆனால், பேரூராட்சி செயல் அலுவலரால் திரு. இரா. இராமச்சந்திரன் மீது இந்நாள்வரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.
- மேற்பார்வையாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. இரா. இராமச்சந்திரன் தனது பணிக் காலத்தில் முறைகேடாக பெற்ற பணத்தினை திருப்பி செலுத்திவிட்டார் என பேரூராட்சியால் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு முறைகேடு செய்த பணத்தை திரும்ப செலுத்தியதால் முறைகேடுகள் சரியாகிவிடுமா என்ற கேள்வி எழுகிறது.
- தூய்மைப் பணி மேற்பார்வையாளராக பணியாற்றிய திரு. இரா. இராமச்சந்திரன் வசிக்கும் தெருவில், இவரது பெயரில் 8 வீடுகள் உள்ளன. இந்த உயர்ரக வீடுகளுக்கு சொத்து வரியானது முறைகேடாக குறைந்தளவு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- இம்முறைகேட்டினையும் தணிக்கைத் துறை உறுதி செய்துள்ள நிலையில் பேரூராட்சியால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.
- திரு. இரா. இராமச்சந்திரன் என்பவரின் பெயரில் உள்ள 8 வீடுகளுக்கான சொத்தினை குறித்து முறையாக அனுமதி பெறப்படவில்லை என்கிற கூடுதல் புகாரினை தெரிவித்து கொள்கிறேன்.
- பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படும் வகையில் இம்முறைகேட்டிற்கு உடந்தையாக இருந்த பேரூராட்சியின் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இராதாகிருஷ்ணன் என்பவர் 17.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்:–

- மனுதாரர் புகாராக தெரிவித்துள்ளவாறு, வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சியில் பொது சுகாதாரப் பணிகளை செய்தமைக்கான உரிய தொகை முறைகேடாக தூய்மைப் பணி மேற்பார்வையாளர் திரு. இரா. இராமச்சந்திரன்

என்பவரின் பேரில் வழங்கப்பட்டதை, 2020–21–ம் ஆண்டு உள்ளாட்சி நிதி தணிக்கையில் தடை எழுப்பப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டது.

- இதன் அடிப்படையில் பேரூராட்சி தூய்மைப் பணி மேற்பார்வையாளர் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நிரூபணமான குற்றச்சாட்டிற்கு 1 வருட திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் செய்து 07.05.2024 நாளிட்ட ஆணை வெளியிடப்பட்டது. ஆனால் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் வயது முதிர்வின் காரணமாக 31.05.2024 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற இருந்ததால் விதிகளின்படி அன்னார் பெற்ற மிகை ஊதியம் ரூ.12,456/– தொகையான 23.05.2024 அன்று திரும்ப பெறப்பட்டது.
- மேலும் தணிக்கைத் தடையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் குறித்தான தொகையான ரூ.41,175/– திரு. இரா. இராமச்சந்திரன் என்பவரால் 08.05.2024 அன்று பேரூராட்சி பொது நிதியில் செலுத்தப்பட்டது.
- திரு. இரா. இராமச்சந்திரன் என்பவரின் பெயரில் 8 வீடுகள் உள்ளன. அவற்றில் 6 வீடுகளுக்கான குடியிருப்புக்கான சொத்து வரி முறையாக பெறப்பட்டுள்ளது. ஆனால், தனியரின் பெயரிலுள்ள 2 வணிக கட்டடங்களுக்கு 2017–18 முதல் வரிவிதிப்பு செய்யப்படாமல் இருப்பதை உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் குறைபாடு தெரிவித்துள்ள அறிக்கையின்படி, திரு. இரா. இராமச்சந்திரன் என்பவரிடமிருந்து கட்டட உரிமைத் தொகை, அபராத தொகை, உட்கட்டமைப்பு கட்டணம் மற்றும் கட்டட தொழிலாளர் நலநிதி தொகை ஆகிய அனைத்தும் வசூல் செய்யப்பட்டு பேரூராட்சியின் நிதியில் செலுத்தப்பட்டுள்ளது.

மனுதாரர் கூடுதலாக புகாராக தெரிவித்துள்ள 8 வீடுகள் கொண்ட சொத்து குறித்து அனுமதி பெற்றுள்ளரா என்பது குறித்த புகார் தற்போது தான் எழுப்பப்பட்டுள்ளதால், இப்புகார் குறித்து தகவல் தெரிவிக்க இயலவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு என்ற இடத்தைச் சார்ந்த திரு. P. மணிமாறன் என்பவர் தனது 14.10.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில், விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சியில் தூய்மைப் பணி மேற்பார்வையாளராக பணிபுரியும் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் 2020 ஆம் ஆண்டில் பேரூராட்சி பணிகள் செய்யாமலே பணி செய்ததாக திரு. இரா. இராமச்சந்திரன் பெயரில் காசோலைகள் முறைகேடாக வழங்கப்பட்டுள்ளது எனவும், திரு. இரா. இராமச்சந்திரன் என்பவரின் பெயரிலுள்ள 8 வீடுகளுக்கு குறைந்தளவு சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டு, பேரூராட்சியின் நிதியினை கையாடல் செய்துள்ளார் என புகார் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சியில் 2020–21 ஆம் ஆண்டில் பொது சுகாதாரப் பணிகளான வளம் மீட்பு பூங்காவில் குப்பைகள் அகற்றுவதற்கும், வார்டு 17–ல் வைத்தியநாத தீட்சிதர் ஊரணிப் பகுதியில் முட்செடிகளை அகற்றுதல் போன்ற பணிகளுக்கு பேரூராட்சி தூய்மைப் பணி மேற்பார்வையாளரான திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் சமர்ப்பித்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, ஒப்புந்தப்புள்ளி சட்ட விதிக்கு முரணாக அரசு ஊழியருக்கு சுகாதார பணி மேற்கொண்டதற்கு அவரது பெயரில் ரூ.41,175 மொத்த செலவினத்தில் பல்வேறு நாளிட்ட காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது. இதனை விருதுநகர் உள்ளாட்சித் நிதித் தணிக்கைத் துறையால் தணிக்கை செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டதின் அடிப்படையில், பேரூராட்சி தூய்மைப் பணி மேற்பார்வையாளர் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2003–ன் கீழ் ஒழுங்கு முறை நடவடிக்கை பேரூராட்சி செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு, நிரூபணமான குற்றச்சாட்டிற்கு தூய்மை பணி மேற்பார்வையாளர் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் மீது ஒரு வருட காலத்திற்கு ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்ய பேரூராட்சி செயல் அலுவலரின் நடவடிக்கைகள் ந.க. எண் 61/2022 நாள் 07.05.2024–ல் ஆணை வெளியிடப்பட்டது. திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் வயது முதிர்வின் காரணமாக 31.05.2024 அன்று பணியிலிருந்து ஓய்வு பெறவிருந்த நிலையில், அன்னார் தான் பெற்ற மிகை ஊதியமான ரூ.12,456/–ஐ 23.05.2024 அன்று பேரூராட்சியில் செலுத்தி பொது நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளதையும் மற்றும் தணிக்கைத் தடையில் சுட்டிக் காட்டிய ரூ.41,175/– தொகையும் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவர் 08.05.2024 அன்று பேரூராட்சியில் செலுத்தியுள்ளதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, அவரது வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிறது.

மனுதாரரின் மற்றொரு புகாரான திரு. இரா. இராமச்சந்திரன் என்பவரின் பெயரில் 8 வீடுகள் இருப்பது தொடர்பாக 4 வீடுகள் பூர்வீக சொத்து என்பதால் சொத்து வரியானது அவரது தந்தை பெயரிலிருந்து தனியர் திரு. இரா. இராமச்சந்திரன் பெயரில் மாற்றம் செய்யப்பட்டு, விதிகளின்படி உரிய குடியிருப்பு சொத்து வரிவிதிக்கப்பட்டது எனவும், 2 குடியிருப்பு வீடுகள் திரு. இரா. இராமச்சந்திரன் பெயரிலுள்ள சொத்து வரியும் விதிகளின்படி முறையாக நிர்ணயம் செய்யப்பட்டு இந்நாள்வரை சொத்து வரி செலுத்தி வருவதாகவும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது. மீதமுள்ள 2 வணிகக் கட்டடங்களுக்கு 2017–18 ஆம் ஆண்டு முதல் வரி விதிப்பு செய்யப்படாமல் இருப்பதை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையினரால் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டதன் அடிப்படையில் மேற்காணும் 2 வணிகக் கட்டடங்களுக்கான கட்டட உரிமைத் தொகை, அபராத தொகை, உட்கட்டமைப்பு கட்டணம் மற்றும் கட்டட தொழிலாளர் நல நிதி தொகை ஆகிய அனைத்தும் திரு. இரா. இராமச்சந்திரன் என்பவரிடமிருந்து வசூல் செய்யப்பட்டு பேரூராட்சியின் நிதியில் செலுத்தப்பட்டுள்ளதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, அவரது வாக்குமூலம் ஆகியவற்றின் மூலமாக அறிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில், 2020-21ஆம் ஆண்டு விருதுநகர் உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கையில் மனுதாரரின் புகார் குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ள தணிக்கைத் தடைகள் மீது பேரூராட்சி செயல் அலுவலரால் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 06ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. P. மணிமாறன்,
கதவு எண்.131A, மேலப்பாளையம், வத்ராப்,
வடக்குத் தெரு,
விருதுநகர் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
வத்திராயிருப்பு தேர்வுநிலை பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை –600 028

4) இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 600 028

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.